முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை – 2015 யூலை

# (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

(Economics for Business and Accounting)

2015 – 07 - 25
பிற்பகல்
[1.00 – 3.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):**
  (1) ***நேரம் :*** *02 மணித்தியாலம்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***
  (3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட விடைப் புத்தகத்தில் பரீட்சைக்கு விண்ணப்பித்த ஒரே மொழியில் மட்டும் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *எல்லா செயன்முறைகள் மற்றும் கணிப்புகளை சமர்ப்பிக்கவும். ஏதாவது எடுகோள்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*
  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) *வரைபுத் தாள்கள் வழங்கப்படும்.*
  (7) ***செயல்முறை விளக்க வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு வினைச் சொல் உள்ளடங்கியிருக்கிறது. (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல்முறை விளக்கப் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (8) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இலக்கம்* ***1.1*** *முதல்* ***1.10*** *வரையிலான வினாக்களுக்காக நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை உங்களது விடைப் புத்தகத்தில் வினாவுக்கு தரப்பட்ட இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** பொருளியலில் அருமை (scarcity) என்பதன் கருத்தை பின்வருவனவற்றுள் எது சரியாக விளக்குகின்றது?

(1) பொருட்கள் மற்றும் சேவைகள் உற்பத்திக்கு வளங்களின் குறைவான பயன்பாடே (under utilization) அருமை எனப்படும்.

(2) பொருட்கள் மற்றும் சேவைகள் உற்பத்திக்கு வளங்களின் மாற்றுப் பயன்பாடே அருமை ஆகும்.

(3) மனிதத் தேவைகள் மற்றும் வரையறையற்ற விருப்பங்கள் தொடர்பில் உள்ள வளங்களின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவே (limited availability) அருமை எனப்படும்.

(4) கைவிடப்பட்ட பண்டமொன்றிலிருந்து (forgone commodity) ஏற்படும் அமையச் செலவே அருமை ஆகும். (02 புள்ளிகள்)

**1.2** உற்பத்திச் சாத்திய வளையி,

(1) பொருட்களின் உற்பத்தியைப் பாதிக்கின்ற தொழில்நுட்ப கண்டுபிடிப்பைக் காட்டுகிறது.

(2) நிலவுகின்ற தொழில்நுட்பம் மற்றும் வளங்களின் முழுமையான தொழிற்பாடு ஆகியவற்றுடன்கூடிய பொருளாதாரமொன்றினால் உற்பத்தி செய்யப்படக்கூடிய இரு வகைப் பொருட்களது வெளியீட்டின் உச்ச சாத்திய சேர்க்கைகளைக் (maximum possible combinations) காட்டுகிறது.

(3) ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் காட்டுகிறது.

(4) மிகவும் வினைத்திறனுடனான வளங்களின் ஒதுக்கீட்டைக் காட்டுகின்றது. (02 புள்ளிகள்)

**1.3** விலைப் பொறிமுறையினால் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவது,

(1) திட்டமிடப்பட்ட பொருளாதாரமொன்றில்

(2) சந்தைப் பொருளாதாரமொன்றில்

(3) கலப்புப் பொருளாதாரமொன்றில்


(4) மாறும் நிலைப் பொருளாதார (a transition economy) மொன்றில் (02 புள்ளிகள்)

**1.4** பண்டமொன்றின் விலையானது ரூ. 10/- இலிருந்து ரூ. 15/- இற்கு அதிகரிக்கும்போது, அதன் கேள்விக் கணியம் 2500 அலகுகளிலிருந்து 2000 அலகுகளுக்குக் குறைவடைகின்றது. இப்பண்டத்தின் கேள்வியின் விலை நெகிழ்ச்சியானது,

(1) நெகிழ்ச்சியற்றது (2) நெகிழ்ச்சியுள்ளது

(3) அலகு நெகிழ்ச்சியானது (4) பூரண நெகிழ்ச்சியானது (02 புள்ளிகள்)

**1.5** பின்வரும் வரைபடம் பண்டம் ஒன்றின் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளைக் காட்டுகின்றது.




சமநிலை விலை ரூ. 10/- ஆகவும் சமநிலைக் கணியம் 15 அலகுகளாகவும் உள்ளன.

நுகர்வோன் மிகை (Consumer surplus),

(1) ரூ. 150/-. (2) ரூ. 300/-.

(3) ரூ. 75/-. (4) ரூ. 100/-. (02 புள்ளிகள்)

**1.6** ‘‘கறுப்புப் பணம் (Black Money)’’ என்பதனால் கருதப்படுவது யாது?

(1) பணமானது, நபருக்கு நபர் (மக்களுக்கிடையில்) கைமாற்றப்படுவதனால் அது கறுப்புப் பணமாகிறது.

(2) சட்டரீதியான செயன்முறையினூடாக மக்கள் பலரைக் கடந்து செல்லும் பணம்

(3) வெளிக்கூற முடியாத சட்டவிரோத செயன்முறையிலிருந்து பிறப்பிக்கப்படும் பணம்

(4) முகப்பெறுமதியை விட குறைந்த உள்ளார்ந்த பெறுமதியைக் கொண்டுள்ள பணம்

(02 புள்ளிகள்)

**1.7** மத்திய வங்கியின் ஒரு குறிக்கோள்,

(1) இறைக் கொள்கைகளை (fiscal policies) நடைமுறைப்படுத்தல்

(2) வணிக வங்கிகளுக்கு இறுதிநேரக் கடன் வழங்குநராகத் தொழிற்படல்

(3) பொருளாதாரம் மற்றும் விலை மட்டத்தினது ஸ்திரப்படுத்தல்

(4) தேசிய கடன்களின் முகாமைத்துவம் (02 புள்ளிகள்)

**1.8** 2014 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கிணங்க, 2014 இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதமானது,

(1) 5.4% (2) 7.4%

(3) 6.4% (4) 8.4% (02 புள்ளிகள்)

**1.9** அரசாங்கத்தின் நடைமுறை இடமாற்றத்தின் (current transfers) ஒரு உதாரணமாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

(1) அரசாங்கத்தால் ஜப்பானிலிருந்து இயந்திரமொன்றின் கொள்வனவு

(2) அரசாங்கத்தால் ஒரு பாகிஸ்தானிய பிரசைக்கு வட்டிக் கொடுப்பனவு

(3) அரசாங்கத்தால் இலங்கைப் பிரசைக்கு ஒருவழிக் கொடுப்பனவு (One way payment)

(4) மேலேயுள்ள எதுவுமில்லை. (02 புள்ளிகள்)

**1.10** அந்நியச் நாணயமாற்றுச் சந்தையின் ஒரு தொழிற்பாட்டினை பின்வருவனவற்றி லிருந்து தெரிவுசெய்க.

(1) சர்வதேச கொடுக்கல் வாங்கல்களுக்காக வணிக வங்கிகளுக்கு வசதிகளை வழங்குதல்

(2) கொள்வனவாளர் மற்றும் விற்பனையாளர்களுக்கிடையே வெளிநாட்டு நாணயங் களுக்காக உள்ளூர் நாணயத்தின் பரிமாற்றத்திற்கான உட்கட்டமைப்பினை வழங்குதல்

(3) நாட்டின் நிலையான நாணயமாற்று வீதத்தைத் தீர்மானித்தல்

(4) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு வெளிநாட்டு மூலதன மாற்றத்திற்கான உட்கட்டமைப்பை வழங்குதல் (02 புள்ளிகள்)

*பின்வரும் **1.11** முதல் **1.15** வரையிலான கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியா** அல்லது **தவறா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவு செய்த விடையை அதன் வினாவுக்குரிய இலக்கத்துடன் உமது விடைத்தாளில் எழுதுக.*

**1.11** எல்லைப்பயன்பாடு குறிப்பிட்டதொரு புள்ளி வரை குறைந்து செல்லாத சில சந்தர்ப்பங்களும் உள்ளன. (02 புள்ளிகள்)

**1.12** சராசரிக் கிரய வளையியின் ஆகக் குறைந்த புள்ளியில் சராசரிக் கிரயமானது எல்லைக் கிரயத்திற்குச் சமனாக இருக்கும். (02 புள்ளிகள்)

**1.13** ஒரு நாட்டின் தனிநபர் வருமானமானது தேசிய வருமானத்தின் நியாயமான பங்கீட்டைக் காட்டுகிறது. (02 புள்ளிகள்)

**1.14** நெகிழ்ச்சியான நாணயமாற்று வீதமானது ஒரு நாட்டின் மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்றது. (02 புள்ளிகள்)

**1.15** அரசாங்கம் விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காக குறிப்பிட்டதொரு விவசாய உற்பத்திப் பொருளுக்கு குறைந்தபட்ச கொள்வனவு விலையை விதிக்கின்றது. (02 புள்ளிகள்)

*வினா இல. **1.16** முதல் **1.18** வரையிலான வினாக்களுக்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள இரண்டு சொற்களுள் சரியானதைத் தெரிவுசெய்து இடைவெளியை நிரப்புக. **தெரிவுசெய்யப்பட்ட சொல்லை** உங்களுக்குத் தரப்பட்டுள்ள விடைப் புத்தகத்தில் வினாவின் இலக்கத்தைக் குறிப்பிட்டு எழுதுக.*

**1.16** விலை தவிர்ந்த கேள்வியைத் தீர்மானிக்கும் காரணியொன்றில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக கேள்வி மாற்றமடையுமாயின் கேள்வி வளையி ....................... (வலப்பக்கத்திற்கு அல்லது இடப்பக்கத்திற்கு பெயருகின்றது / அதே கேள்வி வளையியினூடு நகர்கின்றது). (02 புள்ளிகள்)

**1.17** ஒரு நுகர்வோனின் வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்புடன் பண்டத்திற்கான கேள்வி வீழ்ச்சியடையுமாயின் அப்பண்டம்.......................(சாதாரண / கிபன்) பண்டமெ‌ன அழைக்கப்படும். (02 புள்ளிகள்)

**1.18** ....................... (ஏறுமுக / இறங்குமுக) வரி முறைமையின் கீழ் உயர் வருமானமீட்டுபவர் களுக்கு உயர் வீதத்தில் வரி விதிக்கப்படும் அதேவேளை குறைந்த வருமானமீட்டு பவர்களுக்கு குறைந்த வீதத்தில் வரிவிதிக்கப்படும். (02 புள்ளிகள்)

*பின்வரும் தரவுகளை வினா இலக்கம் **1.19** மற்றும் **1.20** ஆகியவற்றுக்கு விடையளிக்கப் பயன்படுத்தப்படல் வேண்டும். வினாவுக்குரிய இலக்கத்துடன் **சுருக்கமான விடைகளை** உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

நிறைபோட்டிச் சந்தையின் கீழ் உள்ள நிறுவனமொன்றுடன் தொடர்புடைய பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன.

| **உற்பத்தி (அலகுகள்)** | **சராசரிக் கிரயம் (ரூ.)** | **எல்லைக் கிரயம் (ரூ.)** |
|---|---|---|
| 1 | 85 | 27.5 |
| 2 | 55 | 22.5 |
| 3 | 43.3 | 25 |
| 4 | 40 | 35 |
| 5 | 40 | 45 |
| 6 | 41.6 | 55 |
| 7 | 44.3 | 65 |

அலகொன்றிற்கான சந்தை விலை ரூ. 45/- எனக் கொள்க.

**1.19** இலாப உச்சப்படுத்தல் மட்டத்தில் உற்பத்திக் கணியம் யாது? (02 புள்ளிகள்)

**1.20** நிறுவனத்தின் அதிமிகை இலாபம் (supernormal profit) எவ்வளவு? (02 புள்ளிகள்)

*பகுதி A முடிந்தது*

# பகுதி B

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 32 புள்ளிகள்)

## வினா 02

(a) மனிதத் தேவைகள் (Human Needs), மனித விருப்பங்கள் (Human Wants) ஆகியவற்றுக் கிடையிலான வேறுபாட்டை உதாரணங்களுடன் **விளக்குக**. (04 புள்ளிகள்)

(b) அருமை (scarcity), பொருளாதாரத்தின் அடிப்படையாகக் கருதப்படுவது ஏனென்பதனை **விளக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா 03**

(a) நிறைபோட்டிச் சந்தையின் கீழ் நிறுவனமொன்றின் நீண்டகால சமநிலையை வரைபொன்றின் துணையுடன் **விளக்குக**.

(04 புள்ளிகள்)

(b) ஏகபோக உரிமையின் (monopoly) அடிப்படை இயல்புகள் நான்கினைக் (04) **குறிப்பிடுக**.

(04 புள்ளிகள்)
(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா 04**

(a) பணத்தின் பெறுமதி (value of money) என்பதனால் கருதப்படுவது யாதென்பதைச் சுருக்கமாக **விபரிக்குக**.

(04 புள்ளிகள்)

(b) ஒரு நாட்டின் பொதுவிலை மட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பின் நான்கு (04) தாக்கங்களைப் (effects) **பட்டியலிடுக**. (04 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா 05**

(a) "சென்மதி நிலுவை" (Balance of payment) என்பதனால் கருதப்படுவது யாதென்பதைச் சுருக்கமாக **விளக்குக**.

(03 புள்ளிகள்)

(b) இலங்கை பின்பற்றுகின்ற சென்மதி நிலுவைக் கொள்கைகள் ஐந்தினைத் (05) **தொகுத்து** எழுதுக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

*பகுதி B முடிந்தது*

## பகுதி C

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 28 புள்ளிகள்)

**வினா 06**

(a) இருதுறைப் பொருளாதாரம் ஒன்றில் (two sector economy) வருமானத்தின் வட்டப் பாய்ச்சலை பாய்ச்சல்கோட்டு அட்டவணையொன்றின் (flowchart) துணையுடன் **விளக்குக**.
(04 புள்ளிகள்)

(b) நடப்பு விலைகள் (Current Prices) மற்றும் மாறிலி விலைகளில் (Constant Prices) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) கணிப்பீடுகளுக்கிடையிலுள்ள வேறுபாட்டை **இனங்காண்க**.
(04 புள்ளிகள்)

(c) பின்வரும் அட்டவணை, காரணிக் கிரய விலைகளில் பொருளாதாரமொன்றின் ஓராண்டுக் காலப் பகுதிக்கான தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய மாதிரித் தரவுகளை காட்டுகிறது.

| | | ரூ. மில்லியன் |
|---|---|---|
| (1) | விவசாயம், பண்ணை விலங்கு மற்றும் காடு வளர்ப்பு | 150 |
| (2) | மீன்பிடித் தொழில் | 50 |
| (3) | சுரங்கத்தொழில் மற்றும் கல்வளை | 89 |
| (4) | உற்பத்தித் தொழிற்துறை | 75 |
| (5) | மின்சாரம், எரிவாயு மற்றும் நீர் | 40 |
| (6) | கட்டுமானத் தொழில் | 58 |
| (7) | மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் | 70 |
| (8) | ஹோட்டல்கள் மற்றும் உணவு விடுதிகள் | 20 |
| (9) | போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் | 60 |
| (10) | வங்கியியல், காப்புறுதி மற்றும் மனைகள் | 40 |
| (11) | உரித்துடமை மற்றும் குடியிருப்பு மனைகள் | 10 |
| (12) | அரசாங்க சேவைகள் | 10 |
| (13) | தனியார் சேவைகள் | 13 |
| (14) | வெளிநாட்டிலிருந்து நிகர காரணி வருமானம் | (10) |
| (15) | நேரில் வரிகள் | 30 |
| (16) | மானியங்கள் | 20 |

பின்வருவனவற்றைக் **கணிக்குக:**

(i) காரணிக் கிரய விலையில் மொத்தத் தேசிய உற்பத்தி (GNP). (04 புள்ளிகள்)

(ii) சந்தை விலையில் மொத்தத் தேசிய உற்பத்தி. (02 புள்ளிகள்)

(மொத்தம் 14 புள்ளிகள்)

## வினா 07

(a) பொருளாதார வளர்ச்சி (Economic Growth) மற்றும் பொருளாதார அபிவிருத்தி (Economic Development) ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசத்தை **விளக்குக**. (04 புள்ளிகள்)

(b) பொருளாதார வளர்ச்சியை (economic growth) அடைவதற்கு பங்களிக்கும் நான்கு (04) காரணிகளை **இனங்காண்க**. (04 புள்ளிகள்)

(c) பொருளாதார மற்றும் சமூக நலன்புரிதலை மேம்படுத்துவதற்கு சந்தையில் அரசாங்கம் தலையீடு செய்கின்ற பிரதான வழிகளைத் **தொகுத்துக்** கூறுக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 14 புள்ளிகள்)

*பகுதி C முடிந்தது*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |